In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 181/2016 |
| PW: | 7 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 30-06-2026 நாள்: செவ்வாய் |
| பெயர்: | குமார் |
| த/பெ: | சோலையப்பன் |
| ஊர்: | கோவில்பட்டி |
| வேலை: | தனியார் |
| வயது: | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.06.2026**
(Accused A1 to A3 present).

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பெங்களூரில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள். அ.சா.1 எனது நண்பரின் தங்கை ஆவார். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் விசாரணை</u>**

1. கடந்த 21.04.2016 ம் தேதி காலை 10.00 மணியளவில் அ.சா.1 மஞ்சுளா அவரது வீட்டில் இருந்த போது, வெள்ளைச்சாமி என்பவருக்கும் எனது அப்பாவிற்கு கோவில் கொடையில் முதல் மரியாதை செய்வது தொடர்பாக முன்விரோதம்

இருந்தது தொடர்பாக எதிரிகள் கவியரசன், தமோதரனும் என்னை விரட்டி கொண்டு வந்ததாகவும், அப்போது மேற்படி எதிரிகள் அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என்னை தேடிய போது, அ.சா.1 யை கீழே தள்ளி செறுப்பு காலால் மிதித்ததாகவும், இதுகுறித்து அசா.1 எதிரி வசந்த குமாரிடம் கேட்ட போது, எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் இதுகுறித்து போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதனமாக சென்று விட்ட படியால் அளித்து தற்போது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் பகையோ பிரச்சனையோ கிடையாது என்றால் சரிதான்.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.